உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 02.09.2026 • மலர் 04 • இதழ்: 245 • புதன் • Edition : Nagercoil • 02.09.2026 • Vol : 04 • Issue : 245 • Page : 4 • Rs. 5/-

# பயங்கரவாத எதிர்ப்பில் இரட்டை நிலைப்பாடு கூடாது

## ஷாங்காய் மாநாட்டில் பிரதமர் மோடி



பிஷ்கெக்: "பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இரட்டை நிலைப்பாடுகள் இருக்கக்கூடாது. நிதியுதவி, ஆள் சேர்ப்பு, தீவிரவாதமயமாக்கல் மற்றும் பாதுகாப்பான புகலிடங்கள் உள்ளிட்ட பயங்கரவாதத்தின் முழு கட்டமைப்பும் ஒழிக்கப்பட வேண்டும்" என ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்.

கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கெக்கில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) உச்சி மாநாடு நேற்று தொடங்கியது. இதில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், சீன அதிபர் ஜி ஜின்பிங் பங்கேற்றனர்.

பிஷ்கெக்கில் நடைபெற்ற 26வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் உரையாற்றிய பிரதமர் மோடி, "பயங்கரவாதம் மனிதகுலம் முழுவதற்கும் ஒரு பெரும் சவாலாக நீடிக்கிறது. இதற்கு எதிரான போராட்டம் என்பது வெறும் "நடவடிக்கைகள் திர்வினை" என்ற மனப்பான்மைக்குள்ளேயே நின்றுவிடக்கூடாது.

பயங்கரவாதத்திற்கான நிதியுதவி, ஆள் சேர்ப்பு, தீவிரவாதமயமாக்கல் மற்றும் பாதுகாப்பான புகலிடங்கள் என அதன் முழு கட்டமைப்பையும் நாம் தகர்க்க வேண்டும். இந்த முக்கியமான விவகாரத்தில் இரட்டை நிலைப்பாடுகளுக்கு இடமில்லை என்பதை நாம் அனைவரும் ஒரே குரலில் கூற வேண்டும்.

பயங்கரவாதத்தை தங்கள் கொள்கையின் ஒரு கருவியாகப் பயன்படுத்தும் மற்றும் பயங்கரவாதிகளுக்கு அடைக்கலமும் ஆதரவும் அளிக்கும் நாடுகளுக்கு ஒரு வலுவான செய்தியை நாம் அனுப்ப வேண்டும். பயங்கரவாதம் யாருக்கும் ஒரு வியூகம் சார்ந்த சொத்தாக இருக்க முடியாது.

அமைதியான மற்றும் பாதுகாப்பான யூரேசியாவுக்கான நமது கூட்டு விருப்பம், ஆப்கானிஸ்தானின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையுடனும் தொடர்புடையது. ஆப்கானிஸ்தான் மக்களின் மேம்பாடு மற்றும் மனிதாபிமானஉதவிகளுக்கு இந்தியா தொடர்ந்து பங்களித்து வருகிறது, அதைத் தொடர்ந்து செய்யும்.

ஒரு பிராந்தியத்தில் ஏற்படும் மோதல் அங்கேயே நின்றுவிடுவதில்லை. அதன் தாக்கம் உலகம் முழுவதிலும் உள்ள எரிசக்தி பாதுகாப்பு, கடல்சார் வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலிகள் ஆகியவற்றில் உணரப்படுகிறது.

மேற்கு ஆசியாவில் ஏற்பட்ட நெருக்கடியை 'குளோபல் சவுத்' வளரும் நாடுகளே அதிகம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, அனைத்து பதற்றங்களுக்கும் போர்களுக்கும் தீர்வு போர்க்களத்தில் கிடைக்காது; மாறாக பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரத்தின்மூலமே சாத்தியமாகும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு.

இளம் தலைமுறைக்கும் பிராந்திய பாதுகாப்புக்கும் போதைப்பொருள் கடத்தல் ஒரு தீவிர அச்சுறுத்தலாக இருக்கிறது. பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், தகவல் பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் விவகாரங்களைக் கையாளும் வழிமுறைகளுக்கு நமக்குள் வலுவான ஒத்துழைப்பு தேவை" என்று அவர் கூறினார்.

## தக்கலை பகுதியில் ஒரே நாள் நள்ளிரவில் கோவில் உட்பட 6 இடங்களில் கொள்ளை;போலீசார் விசாரணை

தக்கலை, செப்.2

தக்கலை அருகே அழகிய மண்டபத்தில் இசக்கியம்மன் கோவில் உள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவு கோவிலின் வெளி பூட்டை உடைத்து உள்ளே புகுந்த நபர்கள், கோவில் உள்பூட்டை உடைத்து அம்மனின் கருவறைக்குள் சென்று அம்மன் கழுத்தில் கிடந்த காசு மாலை உள்ளிட்ட நகைகளை திருடி சென்றுள்ளனர். அதே போல் கோவிலில் உண்டியலை உடைத்து பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

அதை தொடர்ந்து அதே நபர்கள் அருகில் இருந்த மொபைல் கடை பூட்டை உடைத்து உள்ளே புகுந்துள்ளனர். அந்த கடையில் ஒவ்வொரு அறையாக சோதனை செய்து பார்த்தபோது கடையில் சர்வீஸுக்கு வந்த பழைய செல்போன்கள் அதிகமாக இருந்துள்ளது. இதனால் அவற்றை அங்கே விட்டு விட்டு கடையின் ஷட்டரை திறந்து போட்டு விட்டு அங்கிருந்து சென்றுள்ளனர்.

இதேபோல் அருகில் இருந்த துணிக்கடையின் பூட்டை உடைத்து உள்ளே சென்று பின்னர் கடையில் இருந்த ரூபாய் 20 ஆயிரம் பணத்தை திருடி சென்றுள்ளனர். அதே கடையின் அருகில் இருந்த ஒரு பேக் கடையிலும் மர்ம நபர்கள் பூட்டை உடைத்து பணத்தை திருடி சென்றிருக்கின்றனர்.

தொடர்ந்து அதன் அருகில் இருந்த சூப்பர் மார்க்கெட்டில்பூட்டை உடைக்க முயன்றனர். ஆனால் அங்கு கண்காணிப்பு கேமரா இருந்ததால் மர்ம நபர்கள் ப சூப்பர் மார்க்கெட் உடைக்க முடியாமல் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றுள்ளனர். இதே போல் அருகில் இருந்த ஒரு மரக்கடையில் புகுந்து ரூபாய் 30 ஆயிரம் பணம், செல்போன் போன்றவற்றை திருடி சென்றுள்ளனர். மேலும் அதே கடையின் அலுவலகத்தில் இருந்த கேமராவுக்கான சில பொருட்களையும் உடைத்து சேதப்படுத்தி சென்றுள்ளனர். தக்கலை பகுதியில் ஒரே நாள் நள்ளிரவில் அடுத்தடுத்து ஆறு இடங்களில் பூட்டு உடைக்கப்பட்டு திருட்டு நடந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து தக்கலை போலீசார வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

மேலும் கைரேகை நிபுணர்களை வரவழைக்கப்பட்டு சோதனை நடைபெற்று வருகிறது.

## நாகர்கோவிலில் நகைக்காக மூதாட்டி கொலை அண்ணன்,தம்பியை கைது செய்து சிறையில் அடைப்பு

நாகர்கோவில், செப். 2

நாகர்கோவில் வடிவீஸ்வரம் கீழரதவீதியை சேர்ந்தவர் ஐயப்பன் மனைவி சின்னம்மாள் (77) இவருக்கு மூன்று மகள்கள் உள்ளனர். மூன்று பேரும் திருமணம் ஆகி தனியாக வசித்து வருகின்றனர். ஐயப்பன் ஏற்கனவே இறந்து விட்டதால் சின்னம்மாள் தனியாக வீட்டில் வசித்து வந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் சின்னம்மாள் வீட்டில் கொலை செய்யப்பட்டு, உடல் எரிந்த நிலையில் காணப்பட்டார்.

இந்த சம்பவம் குறித்து கோட்டாறு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில் வடிவீஸ்வரம் பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தபோது ஏற்கனவே அந்தப் பகுதியில் செயல்பட்ட பால் பண்ணையில் வேலை பார்த்து வந்த விருதுநகரை சேர்ந்த வேல்ராஜ் என்ற விக்னேஷ் (32) என்பவர் கொலை செய்தது தெரிய வந்தது.

அவரை அதே தினம் போலீசார் கைது செய்தனர். அவரிடம் இருந்த அவரது தம்பி அரவிந்த் (25) என்பவரும் கைது செய்யப்பட்டார். விசாரணையில் சின்னமாளை கொன்றுவிட்டு அவரது வீட்டில் இருந்த 30 பவுன் நகை மற்றும் ரூ.25,000 பணத்துடன் பைக்கில் தப்பி செல்ல வேல்ராஜ் முடிவு செய்துள்ளது தெரியவந்தது. இதற்காக ஊரில் இருந்து அவரது தம்பி அரவிந்த் என்பவரை பைக்கில் நாகர்கோவில் அழைத்துள்ளார். அவரும் அண்ணன் பணம் தருவதாக கூறியதால் பைக்கில் வந்துள்ளார். ஆனால் கொலை சம்பவம் எதுவும் தனக்கு தெரியாது என அரவிந்த் கூறியுள்ளார்.

கைதான இருவரையும் நேற்று முன்தினம் இரவு மருத்துவ பரிசோதனைக்கு பின் நீதிபதி முன் ஆஜர் படுத்தப்பட்டு நேற்று காலை 5 மணியளவில் இருவரும் நாகர்கோவில் சிறையில் அடைக்கப்பட்டனர்.



அவர்களிடம் இருந்து 30 பவுன் நகை, பணமும் மீட்கப்பட்டுள்ளது. இந்த கொலைசம்பவம் குறித்து அறிந்த 6 மணி நேரத்தில் வேல்ராஜை போலீசார் கைது செய்துள்ளனர்.

இதற்கு வடிவீஸ்வரம் பகுதியில் ஊர்க்காவல் கண்காணிப்புதிட்டத்தில் நிறுவப்பட்டு இருந்த கேமராக்கள் பெரிதும் உதவியாக இருந்து உள்ளன. கடந்த மாதம் தான் இந்த கேமராக்கள் இயக்கத்தை எஸ்.பி ஸ்டாலின் தொடக்கி வைத்தார். இந்த வழக்கில் கைதாகி உள்ள வேல்ராஜ் நாகர்கோவில்தான் பல ஆண்டுகளாக வாடகை வீட்டில் தங்கி இருந்துள்ளார். வாடகைவீட்டில்வைத்து போலீசார் அவரை கைது செய்தனர்.

## கூட்டுறவு பயிர்க் கடன் தள்ளுபடி கோரி சென்னையில் விவசாயிகள் உண்ணாவிரத போராட்டம்



சென்னை: கூட்டுறவு பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்யக் கோரி, சென்னை எழும்பூரில் விவசாயிகள் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகளுக்கு தமிழக முதல்வர் அளித்த உத்தரவாதத்தின்படி, கூட்டுறவு பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்யக் கோரி, தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் உள்பட 35 விவசாய சங்கங்கள் சார்பில், காலவரையற்ற உண்ணாவிரதம் மற்றும் தொடர் காத்திருப்பு போராட்டம் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் கோரிக்கையை வலியுறுத்தி விவசாயிகள் முழக்கங்கள் எழுப்பினர்.

போராட்டத்தில், தமிழக விவசாயிகள் சங்க கூட்டு இயக்கம் பொதுச் செயலாளர் ஏஎஸ்பி ரவீந்திரன் கூறியது: "தேர்தலின்போது, வாக்குறுதி அளித்த அப்போதைய முதல்வர் வேட்பாளர், 5 ஏக்கர் உள்ள விவசாயிகளின் கடனை முழுமையாகவும், பெரிய விவசாயிகளின் கடனை 50 சதவீதம் வரையும் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார்.

ஆனால், விவசாயிகள் பயிர்க் கடன் தள்ளுபடியில் மிகப் பெரிய ஏமாற்றத்தை அளித்துள்ளார். எனவே, ஒற்றை கோரிக்கைக்காக 3வது கட்ட போராட்டத்தை தமிழக விவசாயிகள் நடத்தி கொண்டு இருக்கிறோம். ஒவ்வொரு தேர்தலில் போது, அரசியல் கட்சி தலைவர்கள், வாக்குறுதிகளை மட்டும் அளித்தனர். ஆனால், தற்போதைய முதல்வர், "இது வாக்குறுதிகள் அல்ல. உத்தரவாதம்" என்று தெரிவித்தார்.

2006ம் ஆண்டு முதல் மூன்று முதல்வர்கள் கடன்களை தள்ளுபடி செய்து இருக்கிறார்கள். உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டத்தில் வாடுகிறோம். இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்படுகிறோம். எனவே, கடன் தள்ளுபடி அவசியம். முதல்வர்கள் அறிவித்த உத்தரவாதப்படி, கடன் தள்ளுபடி வேண்டும் என கோரிக்கை விடுக்கிறோம்.

முழுமையான விடுதலை வேண்டுமெனில், கடன் தள்ளுபடி விடுதலை வேண்டும். இதை அறிவிக்க வேண்டும். அதுவரை போராட்டம் தொடரும். முக்கிய பொறுப்பாளர்கள், பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் காவல் துறையின் அழைப்பை ஏற்று, அரசை சந்திக்க பேச்சுவார்த்தைக்கு சென்றுள்ளனர்.

மேட்டூர் அணையில் குறைந்த தண்ணீர் உள்ள நிலையில் திறந்தது வருத்தத்தை அளிக்கிறது. இது யாரோ கொடுத்த தவறான தகவல் அடிப்படையில் திறந்துள்ளனர். மேட்டூர் அணை நீர் மேலாண்மை உணர்ச்சிபூர்வமானது. கலந்தாலோசித்து விவசாயிகள் அனுபவத்தோடு செய்திருக்க வேண்டும். தவறான வழிகாட்டுதல் பேரில், முதல்வர் தண்ணீர் திறந்து உள்ளார்" என்று அவர் கூறினார்.

## சேலம் மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் மற்றும் காவிரி டெல்டா பாசனத்திற்காக தமிழக முதல்வர் ஜோசப் விஜய் மேட்டூர் அணையை திறந்து வைத்தார்



சேலம் செப் 2

நேற்று 1.9.2026 காலை மேட்டூர் அணையின் நீர் மட்டம் 91.56 அடியாகவும், நீர் இருப்பு 54.45 டிஎம்சி ஆகவும், நீர்வரத்து வினாடிக்கு 10,857 கனஅடியாகவும் இருந்தது. அணையின் நீர் இருப்பு மற்றும் நீர்வரத்து ஆகியவை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு பாசன தேவைக்கேற்ப நீர் வெளியேற்றம் படிப்படியாக முறைபடுத்தப்படும். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, நீர்வளத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை ஆகிய துறைகள் மாவட்ட நிர்வாகிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் ஒவ்வொரு கன அடி நீரும் விவசாயிகளின் நலனுக்காக முறையாக பயன்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும். காவிரி ஆறு மற்றும் கால்வாய்களின் வழித்தடங்களில் சட்டவிரோதமாக மின் மோட்டார்கள் மூலம் தண்ணீர் உறிஞ்சுதல், அனுமதி இன்றி நீர் எடுத்தல் மற்றும் அனுமதிக்கப்பட்ட நீர் ஏற்றம் திட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக நீர் எடுப்பது ஆகியவை கண்டிப்பாக தடுக்கப்படும். இதற்காக நீர்வளத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, காவல் துறை மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான கழக அலுவலர்களைக் கொண்ட கூட்டு கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு இரவு பகலாக ரோந்து பணிகளை மேற்கொள்ளும். காவிரி நீர் என்பது நடுவர் மன்ற தீர்ப்பாலும், உச்சநீதிமன்ற தீர்ப்பாலும் உறுதி செய்யப்பட்ட நமது சட்டப்பூர்வ உரிமையாகும். அந்த உரிமையை எந்த சூழ்நிலையிலும் விட்டுக் கொடுக்க மாட்டோம். காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பு மற்றும் உச்ச நீதிமன்றத்தின் 16.2.2018 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி தமிழ்நாட்டுக்கு உரிய நீரை பெற அரசு தொடர்ந்து உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரும். மாண்புமிகு உச்சநீதிமன்றத்தையும் அணுகி தமிழ்நாட்டின் சட்டப்பூர்வ நீர் பங்கையும் டெல்டா விவசாயிகளின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கான அனைத்து சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. தென்மேற்கு பருவ மழை பற்றாக்குறை மற்றும் தீவிர எல் நினோ தாக்கத்தை கருத்தில் கொண்டு தற்போது நீர் திறந்து விடப்பட்டது. வரையறுக்கப்பட்ட நீரை சிக்கனமாகவும் திறம்படவும் நிர்வகித்து சம்பா சாகுபடியை பாதுகாப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கையாகும். எனவே விவசாயிகள் குறைந்த நீர் தேவையுள்ள மத்திய கால நெல் ரகங்களையும், நேரடி நெல் விதைப்பு உள்ளிட்ட நேரத்திற்கான சாகுபடி முறைகளையும் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நீரை சிக்கனமாக பயன்படுத்துவோம் கடை மடை வரை பகிர்ந்து அளிப்போம். சம்பா சாகுபடி வெற்றி பெறச் செய்வோம் என தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் கூறினார். இந்த நிகழ்ச்சியில் நீர்வளத் துறை அமைச்சர் ஆனந்த், போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன், சட்டமன்ற உறுப்பினர்கள் லட்சுமணன், சிவகுமார், பழனிவேல், நீர்வளத்துறை செயலாளர் பிரசாந்த் மு. வடநெரே, சேலம்மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத், நீர்வளத்துறை முதன்மை பொறியாளர் (பொது) கோபாலகிருஷ்ணன், திருச்சி மண்டல தலைமை பொறியாளர் ஜெயக்குமாரி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் விவசாய பெருங்குடி மக்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள சி.வ. அரசு மேல்நிலைப் பள்ளயில் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் திரு.விஷூ மகாஜன், இ.ஆ.ப. அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்

# நந்தா தொழில்நுட்ப கல்லூரியில் முதலாம் ஆண்டு தொடக்க விழா



ஈரோடு செப் 2 ஈரோடு நந்தா தொழில் நுட்ப கல்லூரியின் இளநிலை மற்றும் முதுநிலை முதலாம் ஆண்டு வகுப்புகளின் முதலாம் ஆண்டு தொடக்க விழா நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் சண்முகன் தலைமையில் நடந்தது. அறக்கட்டளையின் உறுப்பினர் பானுமதி சண்முகன் குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தார். விழாவில் நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் சண்முகம் கூறியதாவது பதினெட்டாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் இந்த நேரத்தில் கல்லூரிக்கு தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலிடம் இருந்தும் தேசிய அங்கீகார வாரியத்திடம் இருந்தும் உயரிய தர சான்றிதழ் பெற்றுள்ளது மகிழ்ச்சிக்கு உரியது. எங்களின் முக்கிய குறிக்கோளாக விளங்கும் அனைவருக்கும் வேலை வாய்ப்பு என்கிற அடிப்படையில் மாணவர்களை தொழில்துறையின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தயார் செய்யும் பொருட்கள் பல்வேறு வகையான தொழில் முறை பயிற்சிகள் பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகிறது .எனவே மாணவர்கள் படிப்பு மற்றும் ஆளுமை மேம்பாட்டில் தங்கள் கவனத்தினை செலுத்தி நல்ல பழக்கங்களுடன் ஒழுக்கத்தை கடைபிடித்து பெற்றோர்களின் கனவுகளை நினைவாக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார் . முன்னதாக கல்லூரி முதல்வர் முனைவர் நந்தகோபால் வரவேற்றார். நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்கள் நந்தகுமார் பிரதீப், திருமூர்த்தி மற்றும் நந்தா தொழில் நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் வேலுசாமி ஆகியோர் இதில் கலந்துகொண்டு முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்று வாழ்த்தி பேசினர். விழாவில் சிறப்பு விருந்தினராக முன்னாள் காவல்துறை இயக்குனர் டாக்டர் ரவி கலந்து கொண்டு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கி பேசினார் .முடிவில் முதலாம் ஆண்டு அறிவியல் மற்றும் மனிதநேய துறை தலைவர் முனைவர் விஜயகுமார் நன்றி கூறினார்.

# புகையிலை வைத்திருந்த வாலிபர் கைது

சுசீந்திரம்.செப்.2 சுசீந்திரம் காவல் உதவி ஆய்வாளர் தனிஷ் லியோன் சுசீந்திரம் பகுதியில் காவலர்களுடன் சுசீந்திரம் அருகே உள்ள அத்தானிமார் குளம் பகுதியில் ரோந்து பணி மேற்கொள்ளும் போது சந்தேகப்படும்படி நின்ற நபரை பிடித்து சோதனை செய்ததில் அரசால் தடை செய்யப்பட்ட கணேஷ் என்னும் போதைப் புகை இலை பாக்கெட்டுகள் 7 வைத்திருந்ததை கண்டறிந்தனர் விசாரணையில் அந்த நபர் சுசீந்திரம் அருகே உள்ள நல்லூர் அனந்த் 33 என்பது தெரியவந்தது பின்பு அவரை கைது செய்து சுசீந்திரம் காவல் நிலையம் அழைத்து சென்று வழக்குபதிவு செய்துவிசாரணை மேற்கொண்டு வருகின்றனர்



ஈரோடு மாவட்டம், வடுகபட்டி பேரூராட்சி பகுதியில் கட்டப்பட்டு வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி, நேற்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

# இருசக்கர வாகனம் மாயம்

சுசீந்திரம்.செப்.2 சுசீந்திரம் கீழரதவீதியைச் சார்ந்தவர் பார்கவன் 61 இவர் பில்டிங் கான்ட்ராக்ட் வேலை செய்து வருகிறார் சம்பவத்தன்று சுசீந்திரம் அருகே உள்ள உயர்நிலைப்பள்ளிபக்கத்தில் தனது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு வேலைக்கு சென்று உள்ளார் மீண்டும் மாலை 5 மணி அளவில் தனது இருசக்கர வாகனத்தை நிறுத்திய இடத்தில் பார்க்கும் பொழுது இருசக்கர வாகனத்தைக் காணவில்லை பல்வேறு இடங்களில் தேடியும் இருசக்கர வாகனத்தை கண்டுபிடிக்க முடியவில்லை இது குறித்து பார்கவன் சுசீந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் பேரில் சுசீந்திரம் காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து வாகனத்தை தேடி வருகின்றனர்

# இரணியல் ரயில் நிலையத்தில் 2 வது நடைமேடை மேம்பாலம் அமைக்க ஒப்பந்தப்புள்ளி;ரயில் பயணிகள் சங்கம் தகவல்

நாகர்கோவில், செப்.2 கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் தாலுகாவில் மிக முக்கிய போக்குவரத்து மையமாக இரணியல் ரயில் நிலையம் திகழ்கிறது. புகழ்பெற்ற மண்டைக்காடு பகவதிஅம்மன்கோவில், நெய்யூர் சர்வதேச மருத்துவமனை, பத்மநாபபுரம் அரண்மனை மற்றும் மணவாளக்குறிச்சி மணல் ஆலை போன்ற முக்கிய இடங்களுக்கும், சுற்றுவட்டாரத்தில் உள்ள ஏராளமான கல்வி நிறுவனங்களுக்கும் இந்த ரயில் நிலையமே முதன்மை நுழைவாயிலாக அமைந்துள்ளது. இரணியல் ரயில் நிலையத்தின் வரம்பிற்குள் குளச்சல், பத்மநாபபுரம் ஆகிய நகராட்சிகள், சுமார் 25 கிராம ஊராட்சிகளும் வருகின்றன. மாவட்டத்தின் மற்ற ரயில் நிலையங்களை காட்டிலும், இரணியல் ரயில் நிலையம் மிகப்பரந்த பயணிகள் வரத்து பகுதியைக் கொண்டதாகதிகழ்கிறது. ஆண்டுக்கு சுமார் 6 கோடி ரூபாய் வரை வருவாய் ஈட்டும் இந்த ரயில் நிலையம், தரம் மற்றும் வருவாய் அடிப்படையில் என்எஸ்ஜி5 பிரிவைச் சார்ந்தது.

இரணியல் ரயில் நிலைய விரிவாக்கப் பணிகள் போது பயணிகளுக்கு தேவையான அத்தியாவசிய அடிப்படை வசதிகள் குறிப்பாக நடைமேடை மேம்பாலம் முறையாக ஏற்படுத்தப்படவில்லை. முதல் நடைமேடை தற்போது ரயில் நிலையத்தில் புதிய நிலைய அதிகாரி அலுவலக கட்டிடத்தில் இருந்து பயண சீட்டு எடுத்து நடைமேடைக்கு வருவதற்கு ஏதுவாக நடைமேடையில் உள்ள ரயில் நிலைய பெயர் பலகை அருகே அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட காரணத்தால் நடைமேடையில்இருந்து அடுத்த நடைமேடைக்கு வரவேண்டும் என்றால் நடைமேடை வழியாக சுமார் ஒரு கி.மீ தூரம் நடக்க வேண்டியுள்ளது. இவ்வாறு ஒரு கி.மீ நடப்பதற்கு பயணிகள் யோசித்து ரயில் எந்தவித பாதுகாப்பும் இல்லாமல் இருப்பு பாதை வழியாக நடந்து அடுத்த நடைமேடைக்கு மாற்றுகிறார்கள். இது பயணிகள் பாதுகாப்பு கேள்விக்குறியாகிறது. இதற்கு மாற்றாக இரண்டாவது நடைமேடை மேம்பாலம் திருவனந்தபுரம் மார்க்கம் கடைசியில் உள்ள மின்சார அலுவலகம் அருகே அமைக்க வேண்டும் என்றும் அதை தொடர்ந்து பயணச்சீட்டு அலுவலகம் மற்றும் இரண்டாவது நுழைவாயில் அமைக்க வேண்டும் என்று மொத்தம் இது சார்ந்து ஐந்து கோரிக்கைகள் கன்னியாகுமரி மாவட்ட ரயில் பயணிகள் சங்கம் தெற்கு ரயில்வேக்கு கோரிக்கை விடுத்தது.

இவ்வாறு அனுப்பப்பட்ட கோரிக்கைக்கு தெற்கு ரயில்வே கட்டுமான பிரிவு அதிகாரி இரணியல் நிலையத்தில் இரண்டாவது நடைமேம்பாலம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான டெண்டர் கோரப்பட்டுள்ளது. என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நான்கு கோரிக்கைகள் திருவனந்தபுரம் கோட்டத்துக்கு உட்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு அலுவலகங்களில் பெண் ஊழியர்களின் பிரச்சினையை தீர்க்க விசாகா கமிட்டி அமைக்க வேண்டும்

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கோரிக்கை





ஈரோடு செப் 2 தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட பேரவை கூட்டம் மாவட்ட தலைவர் ரமேஷ் தலைமையில் நடந்தது. துணைத் தலைவர் கௌரி சங்கர் அஞ்சலி தீர்மானத்தை வாசித்தார். துணைத் தலைவர் செந்தில்நாதன் வரவேற்றார். மாநில துணை பொதுச் செயலாளர் மகாலிங்கம் கூட்டத்தை தொடங்கி வைத்தார். மாவட்ட செயலாளர் விஜய மனோகரன் வேலை அறிக்கை வாசித்தார்.பொருளாளர் சுமதி வரவு செலவு அறிக்கை வாசித்தார். மாவட்ட துணை தலைவர் ராக்கிமுத்து ,இணை செயலாளர்கள் சரவண மணி, சசிகலா, சுரேஷ் உள்பட பலர் இதில் கலந்து கொண்டனர். மாநில பொருளாளர் டேனியல் ஜெய் சிங் கூட்டத்தில் நிறைவுரை ஆற்றினார். முடிவில் மாவட்ட பொருளாளர் சுமதி நன்றி கூறினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை உடனடியாக வெளியிட முழுமையாக இத்திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும். 31.12.2025 முன்னர் ஓய்வூ பெற்று கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக பென்சனுக்காக காத்திருப்போருக்கு, உடனடியாக பென்சன் வழங்க வேண்டும். 01.01.2026 பின்னர் ஓய்வு பெற்றோருக்கு இடைக்கால பென்சன் வழங்கும் தமிழக அரசின் முடிவு கடந்த ஆட்சியை போல காலம் தாழ்த்தும் நடவடிக்கையாக இருந்துவிடக்கூடாது. பழைய பென்சனை பெறுவதுதான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் இலக்கு என்றாலும், இடைக்காலமாக தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை பெற்றுக் கொண்டு, பழைய பென்சனுக்கான போராட்டத்தை முன்னெடுப்போம் என இப்பேரவை தீர்மானிக்கிறது. இளைஞர்களின் வேலை வாய்ப்பினை தட்டிப்பறிக்கக்கூடிய வகையில் ஆட்குறைப்பு நடவடிக்கையை கைவிட வேண்டும். இளைஞர்களின் வேலை வாய்ப்பினை தட்டிப்பறிக்கக்கூடிய வகையில் வெளியிடப்பட்ட அரசாணை எண் 56 மற்றும் 115 ஐ தமிழக அரசு உடனடியாக ரத்து செய்திட வேண்டும் .

பல்வேறு துறைகளில் பணிபுரிந்துவரும் தொகுப்பூதிய காலமுறை ஊதியத்தை வழங்கிட வேண்டும் .பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் . இளைஞர்களுக்கு அரசுப் பணி வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் காலியாக உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும் .

பெண் ஊழியர்கள் அனைத்து துறைகளிலும் பணிபுரிந்துவருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் உள்ள அலுவலகங்கள்தோறும் விசாகா கமிட்டி அமைத்து 2 மாதத்திற்கு ஒரு முறை கூடி பெண் ஊழியர்களின் பிரச்சினைகளை தீர்க்க முன்வரவேண்டும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதிகளான, தாளவாடி, பர்கூர் மலைப்பகுதிகளில் பணியாற்றும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் பணி மேம்பாடு அதிகரிக்க மலைப்பகுதிகளில் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தரப்பட வேண்டும் . இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.





# கோவையில் கண்டன ஆர்ப்பாட்டம்

கோவை செப்:02 ராகுல் காந்தி மீது பொய் வழக்கு தொடுத்த மத்திய பாஜக அரசு கண்டித்து கோவை மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக மாவட்ட தலைவர் விஜயகுமார் தலைமையிலும் மாநில துணைத்தலைவர் எம் என் கந்தசாமி முன்னிலையிலும் கோவை கலெக்டர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் சௌந்தர் குமார் சங்கர் எச்எம்எஸ் ராஜாமணி பாஸ்கர் பாசமலர், சண்முகம், கார்த்திக், பேக்கரி முருகேஷ், கோட்டை செல்லப்பா ராஜமாணிக்கம், கணேசன், ஜிகே சௌந்தர்ராஜன், நாராயணன், ஜனார்த்தனன், பாலச்சந்தர், சௌந்தர்ராஜன், இளைஞர்காங்கிரஸ் சுதன் நாயக் கௌதம், பிரவீன், ரங்கநாதன், முகமது கனி பார்த்திபன், பிரிட்டோ பிரபு காளப்பட்டி சண்முகம், கருப்புசாமி வின்சென்ட் தங்கவேலு, பரமேசு, ஜெயக்குமார், ரமேஷ், ஷெரிஃப், மணிகண்டன், கிருஷ்ணமூர்த்தி, அமானுல்லா, சுரேஷ், ஜெயா, தாஹிர், சபானா சமீரா, ராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நீட் எழுதி அரசு மருத்துவ கல்லூரிகளில் சேர்ந்த குமரி மாணவ,மாணவிகளுக்கு பாரதிய ஜனதா பாராட்டு



நாகர்கோவில், செப்.2 நீட் தேர்வு இந்த ஆண்டு எழுதி அரசு மருத்துவக் கல்லூரிகளில் இடம்பிடித்த குமரி மாவட்டத்தை சேர்ந்த மாணவ மாணவியரை கன்யாகுமரி மேற்கு மாவட்ட பாஜக கல்வியாளர் பிரிவு சார்பில் நேரில் சந்தித்து பாராட்டி, வாழ்த்தி கவுரவித்தார்கள். இந்த நிகழ்வில் கன்யாகுமரி மேற்கு மாவட்ட பாஜக தலைவர் ஆர் டி சுரேஷ் தலைமை தாங்கினார். கன்யாகுமரி மேற்கு மாவட்ட பாஜக கல்வியாளர் பிரிவு தலைவர் சக்தி பிரசாத் முன்னிலை வகித்தார். குலசேகரம் அரசுமூடு பகுதியைச் சேர்ந்த சி.விபின் குமார் வி.கே.ஹேமா மாலினி தம்பதியரின் மகள் செல்வி.தர்ஷினி விபின் ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரியிலும், குலசேகரத்தைச் சேர்ந்த மளிகைக் கடை உரிமையாளர் சுரேஷ் மகன் சஞ்சய் குமரி அரசு மருத்துவக் கல்லூரியிலும், பத்மநாபபுரம் பகுதியை சேர்ந்த ஜி.வினோத்குமார் வி.எஸ்.தனுஜா தம்பதியரின் மகள் அக்ஷரா விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரியிலும், மணக்காவிளை பகுதியைச் சேர்ந்த அரசு பேருந்து நடத்துநர் நாகராஜன் மகள் சஞ்சனா ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரியிலும் மருத்துவம் பயில சீட் கிடைக்கப் பெற்றுள்ளது.

மருத்துவம் பயில இருக்கும் அனைத்து மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கியும், சால்வை அணிவித்தும் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் மேற்கு மாவட்ட பாஜக நிர்வாகிகள், மண்டல் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் பலரும் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

# மஞ்சாலுமூடு சந்திப்பில் அரசு டாஸ்மாக் கடையை அகற்றக்கோரி; அனைத்து கட்சி சார்பில் போராட்டம்



மார்த்தாண்டம், செப்.2

அருமனை அருகே மஞ்சாலுமூடு சந்திப்பு பகுதியில் அரசு டாஸ்மாக் கடை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த கடையில் மது வாங்க வரும் குடிமகன்கள் மது குடித்துவிட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஆடை இல்லாமல் விழுந்து கிடப்பதும், வாகன ஓட்டிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலையில் அங்கும் இங்குமாக திரிவது போன்ற செயல்களில் ஈடுபடுவதால் பள்ளி கல்லூரி செல்லும் மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

இதனால் இந்த டாஸ்மாக் கடையை மூடக்கோரி பொதுமக்கள் அரசு அதிகாரிகளை சந்தித்து பலமுறை மனுக்கள் அளித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனை கண்டித்து கடையை அகற்றக்கோரி திமுக, கம்யூனிஸ்ட், காங்கிரஸ், தேமுதிக உள்ளிட்ட கட்சியினர் ஊர் பொதுமக்களை திரட்டி கடைமுன் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையே மதுக்கடை தங்களுக்கு வேண்டும் என்ற கோஷத்துடன் ஒரு தரப்பினர் அங்கு திரண்டு வந்தனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் போலீசார் அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். தொடர்ந்து போராட்டகாரர்கள் சாலையின் ஓரம் கஞ்சி காய்ச்சி தங்களது எதிர்ப்பை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றனர். இந்த போராட்டத்தில் மார்க்சிஸ்ட் கட்சியின் முன்னாள் எம்எல்ஏ லீமா றோஸ் உட்பட பல்வேறு கட்சியினர் பங்கேற்றனர்.



# நல்லம்பள்ளியில் புதிதாக தொடங்கப்பட்ட எழில் சிட் பண்ட் பைனான்ஸ் அலுவலகம் திறப்பு விழா!

தருமபுரி செப்டம்பர் 02

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளியில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள எழில் சிட் பண்ட் பைனான்ஸ் நிறுவனத்தின் புதிய அலுவலக திறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. புதிய அலுவலகத்தில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்ச்சியில், எழில் சிட் பண்ட் குழுமத்தினர் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்து, நிறுவனத்தின் செயல்பாடுகளை தொடங்கி வைத்தனர். இதனைத் தொடர்ந்து, விழாவிற்கு வருகை தந்த சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் பொதுமக்களை வரவேற்கும் வகையில், அலுவலகத்தின் வாசலில் முயல் வேடம் அணிந்திருந்தவர்கள் உற்சாகத்துடன் வரவேற்பு அளித்தனர். வித்தியாசமான இந்த வரவேற்பு, விழாவிற்கு வந்த அனைவரையும் வெகுவாக கவர்ந்தது.தொடர்ந்து, சிறப்பு அழைப்பாளர்களுக்கு எழில் குழுமத்தினர் சார்பில் பொன்னாடை அணிவித்து, டைரி வழங்கி மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டு, திறப்பு விழா மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. புதிதாக தொடங்கப்பட்டுள்ள எழில் சிட் பண்ட் பைனான்ஸ் நிறுவனத்தின் மூலம், நல்லம்பள்ளி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களுக்கு தேவையான நிதி சார்ந்த சேவைகள் கிடைக்கும் வகையில் செயல்படஉள்ளதாக நிறுவனத்தினர் தெரிவித்தனர். வித்தியாசமான வரவேற்பு, சிறப்பு அழைப்பாளர்களுக்கு மரியாதை மற்றும் இனிப்பு வழங்குதல் என, பல்வேறு சிறப்புகளுடன் நடைபெற்ற இந்த அலுவலக திறப்பு விழாவில், எழில் சிட் பண்ட் குழுமத்தினர், சிறப்பு அழைப்பாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தருமபுரி செப்டம்பர் 02

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அதியன் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை ஆட்சியர் பெற்றுக்கொண்டார். சாலை வசதி, குடிநீர் வசதி ,பேருந்து வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் வேண்டியும், பட்டா வேண்டுதல் ,சிட்டா பெயர் மாற்றம் ,புதிய குடும்ப அட்டை, வேலை வாய்ப்பு, முதியோர் ஓய்வூதிய தொகை, இலவச வீட்டு மனை பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை குறித்தும், மற்றும் மாற்று திறனாளிகளுக்கு உதவித்தொகை, உபகரணங்கள் வேண்டியும் மொத்தம் 734 கோரிக்கை மனுக்கள் பொதுமக்களிடம் ருந்து பெறப்பட்டது பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட அனைத்து மனுக்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு துறை சார்ந்த அதிகாரிகளுக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார். இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் ஜார்ஜ், அரூர் வருவாய் கோட்டாட்சியர் செம்மலை, தனித்துணை ஆட்சியர் ஷெர்லி ஏஞ்சலா உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



# பாப்பிரெட்டிப்பட்டி அருகே ஸ்ரீ சுந்தரேச ஆஞ்சநேயர் ஆலய மஹா கும்பாபிஷேக விழா

தருமபுரி செப்டம்பர் 02

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி அடுத்த பூதநத்தம் கிராமத்தில் சாலையோரமாக சிறியதாக இருந்த ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் புதுப்பிக்கும் பணி முன்னாள் சேர்மேன் எஸ். பெரியக்கண்ணு தலைமையில் நடைபெற்றது. கோயில் திருப்பணிகள் முடிவு பெற்று கடந்த 24 ம் தேதி ஶ்ரீ சுந்தரேச ஆஞ்சநேயர் ஆலய மகா கும்பாபிஷேக திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதனை தொடர்ந்து கிராம மக்கள் காங்கனம் கட்டிக் கொண்டு விரதம் இருந்தனர். தொடர்ந்து காலை மாலை இருவேறு வேலைகளிலும் பல்வேறு பூஜைகள் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஸ்ரீ பாலமுருகன் ஆலயத்தில் இருந்து ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயம் வரை பெண்கள் தீர்த்த குடம் எடுத்து ஊர்வலமாக வந்தனர். தொடர்ந்து மங்கள இசை, த்வார பூஜை, வேத பாராயணம், நித்திய சாந்தி உள்ளிட்ட பல்வேறு வகையான ஹோமங்கள் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து பம்பை இசை முழங்க பெண்கள் பால்குடம் எடுத்து கொண்டு ஊர்வலமாக வந்தனர். தொடர்ந்து ஆலயத்தில் இருந்த ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயருக்கு புனித தீர்த்தம் ஊற்றி மகா கும்பாபிஷேகம் மற்றும் மகா ஸம்ப்ரோக்ஷணம் செய்யப்பட்டது. அங்கு கூடியிருந்த மக்கள் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பாலாபிஷேகம், இளநீர் அபிஷேகம் செய்து, வெள்ளிக் கவசத்தில் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் மலர் மாலை, வட மாலை அணிவித்து அலங்காரம் செய்தனர். இந்த கும்பாபிஷேகம் நிகழ்விற்கு வந்த ஏராளமான மக்கள் ஆஞ்சநேயரை தரிசனம் செய்து வணங்கினர்.

மேலும் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் கோவில் நிர்வாகம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.

# இயற்கை வளங்களை சட்டவிரோதமாக வெட்டி எடுப்பதை தடுக்க கடும் நடவடிக்கை

## அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார்

தென்காசி, செப்.2

மாமன்னர் பூலித்தேவரின் 311 ஆவது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, நெற்கட்டும் செவலில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் வி.கே. ராஜீவ் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் சி.டி. ஆர். நிர்மல் குமார் கூறியதாவது:

தமிழ்நாடு முழுவதும் கனிம வளங்களை அரசு அனுமதித்த அளவில் மட்டுமே வெட்டி எடுக்க வேண்டும். சட்டவிரோதமாக செயல்படும் குவாரிகள் மீது வழக்குப்பதிவு செய்து அபராதம் விதிக்கப்படும். கனிம வளங்கள் தொடர்பான வரி ஏய்ப்பு மற்றும் சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய வெளியில் இருந்து மின்சாரம் கொள்முதல் செய்வதை குறைக்கவும், தனியார் பங்களிப்பை பயன்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இயற்கையை பாதிக்காத வகையில் மின் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

# கிருஷ்ணகிரியில் கல்வெட்டுகள் குறித்து விளக்கம்



கிருஷ்ணகிரி மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் அருங்காட்சியக ஆண்டை முன்னிட்டு கல்வெட்டுகளை மெய்ப்படியெடுக்கும் முறை குறித்து தொல்லியல் துறை விளக்கம் அளித்தனர். மாணவர்கள் மற்றும் வரலாற்று ஆர்வலர்கள் கல்வெட்டுகளை படையெடுக்கும் முறையை நேரடியாக அறிந்து கொண்டனர். போச்சம்பள்ளி கல்வெட்டில் கிபி 1248 ஆம் ஆண்டு சோமேஸ்வரன் காலத்தில் நிலம் தானமாக வழங்கப்பட்ட தகவல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இந்தக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் பந்தலப்பள்ளி சிவன் கோயில் எங்கு உள்ளது என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டும் என அருங்காட்சியக காப்பாட்சிய சிவகுமார் தெரிவித்தார்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# சுசீந்திரம் தாணுமாய சுவாமி கோவிலில் நேற்று முதல் கோவிலுக்குள் செல்போன் கொண்டு செல்ல தடை




சுசீந்திரம்.செப் 2

தமிழ்நாட்டில் உள்ள பழமையான புகழ்பெற்ற கோவில்களில் சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவில் முக்கிய இடம் பெறுகின்றது இந்த கோவிலுக்குதினமந்தோறும் உள்ளூர் மட்டுமின்றி வெளியூர் பக்தர்களும் பெருமளவு வந்து சாமி தரிசனம் செய்து செல்கின்றனர்சிலர் கோவிலுக்குள் தங்களது செல்போன் மூலம் படம் பிடிப்பதும் சிலர் அதனை ரீல்ஸாக வெளியிடுவதும் சாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தி வந்தது இதனால் கோவில் நிர்வாகம் செல்போன் கோவிலுக்கு கொண்டு செல்ல தடை விதிக்க முடிவு செய்தது இதன்படி பக்தர்கள் கொண்டு வரும் செல்போனை பாதுகாப்பாக வைப்பதற்காக இரும்பு பாதுகாப்பு பெட்டகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது ஒரு பெட்டகத்தில் சுமார் 60 அறைகள் உள்ளன ஒவ்வொரு அறையில் குறைந்தபட்சம் 8 முதல் 10 செல்போன்கள் வைக்கும் வகையில் பெட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது இந்தப் பெட்டகம் கோயில் நுழைவு வாயில் முன்பு வைக்கப்பட்டுள்ளதுசெல்போன்கொண்டு வரும் பக்தர்கள் செல்போனை பாதுகாப்பதற்காக ரூபாய் ஐந்து விதம் கட்டணம் வசூல் செய்யப்படுகின்றது இதனைத் தொடர்ந்து இன்று அதிகாலை கோவிலுக்கு வருகை புரிந்த பக்தர்களிடம் செல்போன் பெறப்பட்டு பாதுகாக்கப்படுகின்றது இதுபோல் கன்னியாகுமரி பகுதி அம்மன் கோவிலிலும் இன்று முதல் செல்போன் தடை செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது

# ANTHE 2026 அறிமுகம்: மாணவர்களின் திறனை கண்டறிய ஆகாஷ் கல்வி நிறுவனத்தின் திறன் தேடல் தேர்வு




மதுரை, செப். 2:

ஆகாஷ் எஜுகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் (AESL) சார்பில் மாணவர்களின் கல்வித் திறன் மற்றும் போட்டித் தேர்வு தயார்நிலையை மதிப்பிடும் ANTHE 2026 திறன் தேடல் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆண்டுகளில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மாணவர்கள் ANTHE தேர்வில் பதிவு செய்துள்ளதாக AESL தெரிவித்துள்ளது. மாணவர்களின் பாட அறிவு, திறனறிவு, பகுப்பாய்வுத் திறன் மற்றும் தேர்வு செயல்திறனை அறிவியல் ரீதியாக மதிப்பிடும் வகையில் இத்தேர்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

ANTHE 2026ல் தகுதியான மாணவர்களுக்கு 100 சதவீதம் வரை கல்வி உதவித்தொகையும், சிறப்பாகச் செயல்படும் மாணவர்களுக்கு மொத்தம் ரூ.2.5 கோடி ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட உள்ளன. 5 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் முறையில் தேர்வெழுதலாம்.

ஆன்லைன் தேர்வு அக்.27 முதல் நவ.1, 2026 வரையும், ஆஃப்லைன் தேர்வு அக்.11, 25 மற்றும் நவ.1 ஆகிய தேதிகளிலும் நடைபெறும். பதிவுகள் அதிகாரப்பூர்வ ANTHE இணையதளம் மற்றும் ஆகாஷ் மையங்களில் நடைபெற்று வருகின்றன.



தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டம், நெற்கட்டும் செவல் கிராமத்தில் அமைந்துள்ள விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் அவர்களின் 311ஆவது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு அரசு சார்பில் மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.சி.டி. ஆர். நிர்மல் குமார் அவர்கள் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மரு வி.கே. ராஜீவ் அவர்கள்,மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சு. அசோக் குமார், த.கா.ப., அவர்கள் ஆகியோர் பூலித்தேவன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# தமிழக அரசு போக்குவரத்து கழகம் சார்பில் நகரப் பேருந்துகளின் வழித்தடம் நீட்டிப்பு



சேலம் செப் 2

தமிழக முதலமைச்சர் தமிழக மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் நலன் சார்ந்த தொலைநோக்கு சிந்தனையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் எந்த ஒரு கிராமத்திலும் போக்குவரத்து வசதி இல்லாமல் மக்கள் சிரமப்படக்கூடாது என்ற வகையில் பள்ளி கல்லூரி, மாணவ மாணவியர்கள், பெண்கள், பொது மக்கள் மற்றும் தொழிலாளர்கள் உள்ளிட்டோர்களின் அன்றாட வாழ்க்கையை கருத்தில் கொண்டு பல்வேறு பகுதிகளுக்கு பேருந்து வழித்தடங்களை நீட்டிப்பு செய்ய உத்தரவிட்டுள்ளார். அந்த வகையில் நேற்று முன்தினம் ஆத்தூரில் இருந்து தலைவாசல், புளியங்குறிச்சி வழியாக அய்யனார் பாளையம் வரை இயங்கும் நகரப் பேருந்தை புளியங்குறிச்சியில் இருந்து இந்திரா நகர் ஊருக்குள் சென்று திரும்பும் வகையில் தடம் நீட்டிப்பு செய்தும் ஆத்தூரில் இருந்து வீரகனூர், வெள்ளையூர் பிரிவு ரோடு, கைகளத்தூர் வழியாக லப்பைகுடி காடு வரை இயங்கும் நகர பேருந்தை வெள்ளையூர் பிரிவு ரோட்டில் இருந்து வெள்ளையூர்ஊருக்குள்சென்று திரும்பும் வகையில் தடை தடம் நீட்டிப்பு செய்தும், ஆத்தூரில் இருந்து புத்திர கவுண்டம் பாளையம், களரம்பட்டி, ஆரியபாளையம் வழியாக கோபாலபுரம் வரை இயங்கும் நகர பேருந்து கோபாலபுரத்தில்இருந்து மத் ரூட் வரை இயங்கும் வகையில் தடம் நீட்டிப்பு செய்தும், ஆத்தூரில் இருந்து திம்மநாயக்கன்பட்டி வழியாக மங்களாபுரம் வரை இயங்கும் நகர பேருந்து மங்களாபுளத்தில் இருந்து வேப்பிலைப்பட்டி வரை இயங்கும் வகையில் தடம் நீட்டிப்பு செய்தும், வாழப்பாடி பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆத்தூரில் இருந்து அக்கிசெட்டிபாளையம் ஆரியபாளையம் வழியாக வாழப்பாடி செல்லும் நகர் பேருந்து அக்கிசெட்டிபாளையத்தில் இருந்து சொக்கநாதபுரம் ஊருக்குசென்றுதிரும்பும் வகையில் வழித்தடம் நீட்டிப்பு செய்தும் போக்குவரத்து துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் பேருந்துகளின் வழித்தடங்களை நீட்டிப்பு செய்து தொடங்கி வைத்தார்.

# தொண்டி மருத்துவமனையில் பழைய கட்டடத்தில் சமூக விரோத செயல்களால் நோயாளிகள் அவதி: நடவடிக்கை தேவை

## முதல்வருக்கு தமுமுக செயலாளர் பரக்கத் அலி கோரிக்கை



ராமநாதபுரம், செப்.2

ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி தமுமுக செயலாளர் பார்க்கத் அலி தமிழக முதல்வருக்கு அனுப்பி உள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது;

ரா மநாதபுரம் மாவட்டம் திருவாடானை தாலுகா தொண்டி பேரூர் பகுதியில் இயங்கி வரும் அரசு மேம்படுத்தப்பட்ட சுகாதாரநிலையம் மருத்துவமனைக்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கான பொது மக்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் அவசர சிகிச்சைக்காக நோயாளிகள் வந்து செல்கின்றனர். இந்நிலையில், இம்மருத்துவமனையின் மிக அருகிலும், பழைய காவல் நிலையத்தின் பின்புறத்திலும் அமைந்துள்ள பழைய காவலர் குடியிருப்பு கட்டிடம் பல ஆண்டுகளாகப் பராமரிப்பின்றி மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது.

இடிபாடு அடையும் நிலையில் உள்ள இக்கட்டிடத்தைப் பயன்படுத்திச் சிலர் இரவு நேரங்களில் மது அருந்துதல் போன்ற சட்டவிரோத மற்றும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மருத்துவமனைக்கு வரும் பெண்களுக்கும் நோயாளிகளுக்கும் கடும் அச்சமும் பாதுகாப்பற்ற சூழலும் நிலவுகிறது. சுகாதாரச் சீர்கேடு புதர்கள் மண்டிப் பாம்பு மற்றும் நச்சுப் பூச்சிகளின் இருப்பிடமாக மாறியுள்ளதால், நோயாளிகளின் ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கும் சூழல் உருவாகியுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் கருத்தில் கொண்டு, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து அபாயகரமான பழைய கட்டிடத்தை அகற்றிட வேண்டும். அங்கு மருத்துவமனைக்கு புதிய கட்டடங்கள் கட்டி பயன் பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் இவ்வாறு அவர் மனுவில் கூறி உள்ளார்.

# களியக்காவிளையில் போலீஸ் அதிகாரிகளை முற்றுகையிட்ட போதை கும்பல்;பெண் உட்பட 4 பேர் மீது போலீசார் வழக்கு

களியக்காவிளை, செப்.2

கன்னியாகுமரி மாவட்டம் .கேரள எல்லை களியக்காவிளையில் சமீப காலமாக போதை பொருட்கள் புழக்கம் இளைஞர்களிடையே அதிகரித்து வருவதாக பொது மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இரவு நேரத்தில் போதை ஆசாமிகள் அச்சுறுத்தல் காரணமாக அந்த பகுதியில் பொது மக்களுக்கு நடமாட முடியாத நிலை ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு கஞ்சா மற்றும் போதைப்பொருட்கள் பயன்படுத்தி போதை தலைக்கேறிய இளைஞர்களுக்கு இடையே களியக்காவிளை சந்திப்பில் தகராறு ஏற்பட்டு அடி தடி ஏற்பட்டது. இது அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் தகவல் அறிந்து அங்கு விரைந்து சென்ற களியக்காவிளை காவல் நிலைய உதவி ஆய்வாளர் மஹந்த் மற்றும் காவல் அதிகாரிகள் அடிதடியில் ஈடுபட்ட நபர்களை கைது செய்ய முயன்றனர். அப்போது போதை கும்பல் போலீசாரை முற்றுகையிட்டு கைது செய்ய விடாமல் விடாமல் தடுத்தனர். இதில் தகராறில் ஈடுபட்ட முக்கிய நபரான அல்தாஃப் என்ற இளைஞரை கைது செய்ய விடாமல் அந்த இளைஞரின் உறவினர் பெண் ஆன பீமா என்ற பெண் உட்பட போலீஸ் அதிகாரிகளுக்கு மிரட்டல் விடுத்து போதை இளைஞரை கைது செய்ய விடாமல் தடுத்தனர்.

இந்நிலையில் காவல் துறை அதிகாரிகளை சட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுக்க விடாமல் தடுத்து மிரட்டல் விடுத்ததாக பீமா என்ற பெண் மீதும் போதையில் அடிதடியில் ஈடுபட்ட அல்தாஃப் என்ற இளைஞர் மற்றும் கண்டால் தெரியும் 2 பேர் என நான்கு பேர் மீது களியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் களியக்காவிளையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் வளர்ச்சித்திட்ட பணிகள் கலெக்டர் ஆய்வு



நாகர்கோவில், செப். 2

தமிழ்நாடு அரசு சார்பில் நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளை முன்னேற்றும் விதமாக பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகள் மேற்கொள்வதற்காக ஆணையிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதாப் நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து திடீர் ஆய்வு மேற்கொண்டார். மாநகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணன்கோவில் பகுதியில் முதல்வரின் படிப்பகம் ரூ.310 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது. இதில் தரைத்தளம் புத்தகங்களுடன் கூடிய படிப்பகமாகவும், முதல் தளம் உணவருந்தும் இடமாகவும் மற்றும் வாகனம் நிறுத்தும் இடமாகவும் கட்டப்பட்டு வருகிறது. இந்நூலக கட்டட கட்டுமான பணிகளை பார்வையிட்டார்.

தொடர்ந்து மாநகராட்சி பகுதியில் கூட்ட நெரிசலை கட்டுபடுத்துவதற்காக ரூ.69.87 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையத்தையும், வடசேரி பேருந்து நிலைய பகுதியில் ரூ.895 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் 100 புதிய அங்காடிகள் கட்டுமான பணியினையும், மாநகராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ள செம்மாங்குளத்தை ரூ.659 இலட்சம் மதிப்பில் தூர்வாரி சுற்றுச்சுவர் அமைத்து நடைப்பயிற்சி மேற்கொள்வதற்காக நடைபாதை அமைக்கும் பணியினையும், ஒழுகினசேரி பகுதியில் ரூ.95 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் ஓடையையும், புளியடி பகுதியில் அமைந்துள்ள மயானத்தை உயிரி எரிவாயு தகன மேடையாக மாற்றுவது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிக்குமாறு அது தொடர்பான அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆர்.ஐஸ்வர்யா, மாநகர பொறியாளர் ஜெகஜீவ ராமன் மற்றும் உதவி பொறியாளர்கள் உடனிருந்தனர்.

# வேலூரில் சுகாதார உணவு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

வேலூர், செப்.2:

தமிழ்நாடு ஹோட்டல் உரிமையாளர் சங்கம் மற்றும் சத்துவாச்சாரி ஹோட்டல் உரிமையாளர் சங்கம் சார்பில் சுகாதார உணவு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி சத்துவாச்சாரியில் நடைபெற்றது. சங்கத் தலைவர் வெங்கடசுப்பு தலைமை வகித்தார். உணவு பாதுகாப்புத்துறை வேலூர் மாவட்ட நியமன அலுவலர் பிரபாகரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

அவர் பேசுகையில், பொதுமக்களுக்கு பாதுகாப்பான, சுகாதாரமான, தரமான உணவு வழங்குவதை உறுதி செய்ய செப்.1 முதல் நவ.30 வரை சிறப்பு உணவு பாதுகாப்பு ஆய்வுகள் நடைபெறும்




என்றார். ஹோட்டல்கள் சமையலறை மற்றும் உணவு சேமிப்பு இடங்களை தூய்மையாக பராமரிக்க வேண்டும். உணவு கையாளுபவர்கள் கையுறை, தலைக்கவசம் உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்த வேண்டும். விதிமீறல் ஏற்பட்டால் அபராதம் மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 31.08.2026 அன்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து மொத்தம் 610 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன.



பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர், மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு, குறித்த காலக் கெடுவிற்குள் விரைந்து நடவடிக்கைஎடுக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப. ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) இராமகிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலஅளவை) கதிர்வேல் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக அளவில் டென்னிஸ் போட்டி தஞ்சாவூர் சரபோஜி அரசு கல்லூரி முதலிடம்


தஞ்சாவூர்
செப்டம்பர் 2



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக அளவில் கல்லூரிகளுக்கு இடையேயான டென்னிஸ் போட்டியில் முதலிடம் பெற்ற தஞ்சாவூர் சரபோஜி அரசு கல்லூரி மாணவர்கள்பெரம்பலூர் ஹான்ஸ் ரோவர் கல்லூரியில் 2026 27 ஆம் கல்வி ஆண்டுக்கான திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகங்களுக்கிடையே டென்னிஸ் போட்டி அண்மையில் நடைபெற்றது.இதில் பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர் .இதில் தஞ்சாவூர் மன்னர் சரபோஜி அரசு கல்லூரி மாணவர்கள் ஆடவர் பிரிவில் சிறப்பாக விளையாடிய முதல் இடத்தை பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றனர் .சரபோஜி அரசு கல்லூரி டென்னிஸ் பிரிவில் முதல் முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.இந்த சாதனையை நிகழ்ச்சிய மாணவர்கள் முதுநிலை முதலாமா ண்டு மாணவர் தீபக் ,இளநிலை கணினி அறிவியல் முதலாம் ஆண்டு மாணவர் திருமாறன், முதுநிலை கணிதவியல் இரண்டாம் ஆண்டு மாணவர் ராகுல் ஆகியோரையும் ஆணுறை ஊக்குவித்து வழி நடத்திய உடற்கல்வி துறை இயக்குனர் சந்தை சந்தோஷ் குமாரையும் கல்லூரி முதல்வர் சுமதி பாராட்டினார்.

மேலும் கல்லூரி வினையாட்டு குழு உறுப்பினர்கள் மங்களம், பாலாஜி, ஆங்கிலத் துணைத் தலைவர்அருணாசலம் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.

# 20 லட்சம் மக்களைச் சென்றடைந்துள்ள நெக்ஸ்ட் பாரத் வென்ச்சர்ஸ்




சென்னை, செப் 02, ஜப்பானிய முதலீட்டு ஆதரவு பெற்ற "இம்பேக்ட் ஃபர்ஸ்ட் " நிறுவனமான 'நெக்ஸ்ட் பாரத் வென்சர்ஸ், தனது 'இம்பேக்ட் அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்தியாவின் கிராமப்புற மற்றும் முறைசாரா பொருளாதாரத்தில் உள்ள அடுத்த 100 கோடி மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் அதே வேளையில், அளவிடக்கூடிய சமூகத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியும் என்பதை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

" நெக்ஸ்ட் பாரத்" நிறுவனத்தின் முதலீட்டிற்கு பிறகு, முக்கிய துறைகளில் ஏற்பட்டுள்ள வலுவான வர்த்தக வளர்ச்சியுடன் சேர்த்து, இவர்களின் 21 முதலீட்டுப் பங்களிப்பு நிறுவனங்களின் மூலம் இது வரை 20 லட்சம் மக்கள்பயனடைந்துள்ளனர் எனவும், இ தன் விரி தி யா வை ச் சேர்ந்த ஸ்டார்ட்அப்கள் மட்டும் 3 லட்சத்திற்கும் அதிகமான மக்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்றும் இந்த அறிக்கை பதிவிட்டுள்ளது. இந்தியாவில் சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தும் தொழில்முனைவோருக்காக, 'ஓய் காம்பினேட்டர்' மாதிரியிலானஒருதொழில் சூழலை உருவாக்கும் இ ல க் கு டன் நெக்ஸ்ட் பாரத் வென்சர்ஸ், (NBV) நிறுவனம் இது வரை ₹20.76 கோடி தொடக்க நிதியை ஒதுக்கியுள்ளது. இதில், 'பிளாக்ஃப்ராக் டெக்னாலஜிஸ்' நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ₹9 கோடி முதலீடும் அடங்கும். இந்நிறுவனத்தின் 'எம்வோலியோ' சாதனம், தொலைதூர மற்றும் உள் கட்டமைப்பு வசதிகள் குறைந்த பகுதிகளில் தடுப்பூசிகளை கடைசி வரை பாதுகாப்பாகக் கொண்டு சேர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்டது. இந்தியாவின் முதல் காப்புரிமை பெற்ற உலக சுகாதார நிறுவனம் மற்றும் மருந்துத் தர அமைப்பு தகுதிச் சான்று பெற்ற இயங்கு நிலை குளிர்ச்சி தடுப்பூசி கடத்தி ஆகும். இந்த தொழில்நுட்ப தீர்வின் மூலம் இந்தியாவில் இது வரை 2,51,512 பயனாளிகள் பலனடைந்துள்ளது டன், ஆப்பிரிக்க நாடுகளிலும் இது உலகளாவிய அளவில் செயல்பட்டு வருகிறது.

# தொடரும் ரேஷன் அரிசி கடத்தல் கடத்துபவர்கள் மீது குண்டர் சட்டம் பாயுமா?

## கேள்வி எழுப்பும் சமூக ஆர்வலர்கள்

சிவகங்கை செப்2

சிவகங்கை மாவட்டத்தில் பெரு மளவில் ரேஷன் அரிசி கடத்தி வரப்படுவதும், அதனை காவல்துறையினர் கைப்பற்றுவதும், உணவு பாதுகாப்பு துறை இடம் ஒப்படைப்பு செய்து நடவடிக்கைகள் எடுத்து வருவது வாடிக்கையாக உள்ள நிலையில், நாங்கள் சற்றும் சலித்தவர்கள் அல்ல என கடத்துபவர்கள் ஒருபுறம் மேலோங்கி நிற்கின்றனர். இதில் காரைக்குடி வட்டத்திற்குட்பட்ட பள்ளத்தூர், புதுவயல் பகுதிகளில் ரேஷன் அரிசி கடத்துவது சற்று கூடுதலாக இருந்து வரும் நிலையில், இதனை தடுப்பதற்கு சமூக ஆர்வலர்கள் சட்டரீதியாக துணை நிற்கும் போது, இவர்களுக்கு எதிர்ப்பும் ஒரு புறம் வலுத்து நிற்பதாகவும் தெரிகிறது. இப்படிப்பட்ட சம்பவம் தான், காரைக்குடியில் இருந்து புதுக்கோட்டைக்கு செல்லும் மாநில நெடுஞ்சாலை பகுதியான ஆவுடை பொய்கையில் நேற்று TN02 E2992என்ற கருப்பு நிற டாட்டா சுமோ ஒன்று விபத்துக்குள்ளாகியது, இதை அறிந்த அப்பகுதி மக்கள் அங்கு சென்று வாகனத்தை பார்த்த போது உள்ளே ரேஷன் அரிசி இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர், பின்னர் குன்றக்குடி காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது, அங்கு விரைந்து வந்த காவல் துறையினர், ரேஷன்அரிசியை கைப்பற்றி உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது,

இதுகுறிப்பு உணவு பாதுகாப்புத் துறை சார்பு ஆய்வாளர் சுகன்யா கூறும்போது, இந்த வாகனத்தை ஆலங்குடி பகுதியை சேர்ந்த பாலாஜி என்பவர் ஓட்டி வந்ததாகவும், வாகனத்திற்குள் 1500 கிலோ ரேஷன் அரிசி கைப்பற்றப்பட்டதாகவும், கடத்திவரப்பட்ட ஒரு மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார், இதுகுறித்து சமூகம்ஆர்வலர்முத்துமாணிக்கம் கூறும் போது ரேஷன் அரிசி கடத்துவது வாடிக்கையாக இருப்பதைக் காட்டிலும், கடத்துபவர்களுக்கு எளிதாக அமைகிறது, இவைகளுக்கு காரணம் சட்ட நடவடிக்கை குறைவாக இருப்பதாக தெரிகிறது எனவும், ரேஷன் அரிசி கடத்தி வருபவர் மீதும், அதனை பெரும் நபர் மீதும் எவ்வித விசாரணையும் இன்றி குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே ரேஷன் அரிசி க ட த் த ப் ப டு வ து சற்று தடுக்கப்படும் என தெரிவித்தார்.

# பழநி ரயில் நிலையத்தில் 'டிஜிட்டல் லக்கேஜ் லாக்கர்' பயணிகளுக்கான புதிய வசதி




பழநி: பழநி ரயில் நிலையத்தில் பயணிகள் தங்கள் உடைமைகளை பாதுகாப்பாக வைக்க 'டிஜிட்டல் லக்கேஜ் லாக்கர்' வசதி (செப்.1) முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் பழநி ரயில் நிலையத்துக்கு வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள், பக்தர்கள், பொதுமக்கள் வந்து செல்கின்றனர். அவ்வாறு வரும் பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும், ரயில் நிலையத்தை தரம் உயர்த்தவும் முடிவு செய்து, பழநி ரயில் நிலையத்தில் ரூ.14 கோடி செலவில் 'அம்ரித் பாரத்' ரயில் நிலைய திட்டத்தில் மேம்பாட்டு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, பயணிகள் தங்களின் உடைமைகளை போகும் இடங்களுக்கு எல்லாம் தூக்கிச்செல்வதைதவிர்க்கவும், ஒரு ரயிலில் இறங்கி மற்றொரு ரயிலில் செல்லும் இடைப்பட்ட நேரத்தில் தங்கள் உடைமைகளை பாதுகாப்பாக வைத்து விட்டு வெளியே சென்று வர வசதியாக 'டிஜிட்டல் லக்கேஜ் லாக்கர்' வசதி (செப்.1) செவ்வாய்க்கிழமை காலை முதல் ப யன் பா ட் டி ற் கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதனை, ரயில்வே வணிக பிரிவு ஆய்வாளர் அசோக் ராஜ், கண்காணிப்பாளர் சுனில் ராம் ஆகியோர் தொடங்கி வைத்தனர். பயணிகள் தங்களது செல்போனில் டிஜிட்டல் லாக்கரில் உள்ள 'க்யூ ஆர் குறியீட்டை' ஸ்கேன் செய்ய வேண்டும். நடுத்தரம், பெரியது, மிகப்பெரியது என 3 வகைகளில் லாக்கர் அறை வசதி செய்யப்பட்டுள்ளது.

அதில், தேவையான லாக்கரை தேர்வு செய்து, ஜிபே, ஃபோன் பே மூலம் கட்டணத்தை செலுத்த வேண்டும். உடனே, லாக்கர் எண்ணுடன் ரகசிய எண் (ஓடிபி) கிடைக்கும். இதை பயன்படுத்தி, லாக்கர் அறையில் உடைமைகளை வைத்து விட்டு, திரும்பி வந்து எடுத்துக் கொள்ள முடியும். லாக்கர் பெட்டிகள் மற்றும் வைக்கும் நேரத்தை பொறுத்து கட்டணம்வசூலிக்கப்படும்.

அதிகபட்சம் 2 நாட்கள் வரை உடைமைகளை வைத்து செல்லலாம். இந்த லாக்கர் மனிதர்கள் உழைப்பு மற்றும் கண்காணிப்பு இல்லாமல் 24 மணி நேரமும் 2 சிசிடிவி கண்காணிப்பு கேமரா மூலம் இயங்கும். "இந்த லாக்கரை நிர்வகிக்கும் பொறுப்புதனியார்நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது" என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

# விதை விநாயகர் வழிபாடு சிரஞ்சீவி வேண்டுகோள்



ஹைதராபாத்:
செப்டம்பர் 2

நடிகர் சிரஞ்சீவி, விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு விதைகளால் ஆன விநாயகர் சிலைகளை வீடுகளில் வைத்து வழிபட வேண்டுகோள் விடுத்துள்ளார். 'கிரீன்இந்தியா சேலஞ்ச்' அமைப்பின் தலைவர் சந்தோஷ் குமார், முற்றிலும் இயற்கையான முறையில் விதைகளைக் கொண்டு விநாயகர் சிலைகளை தயாரித்துள்ளார். இந்த சிலைகளை நடிகர் சிரஞ்சீவி நேற்று ஹைதராபாத்தில் அறிமுகம் செய்தார்.

அப்போது அவர் பேசுகையில், "விதைகளால் ஆன இந்த அழகிய விநாயகர் சிலைகள் சுற்றுச்சூழலை எந்த வகையிலும் பாதிக்காது. இவற்றை வீட்டில் வைத்து பூஜை செய்த பின்பு, தண்ணீரில் கரைத்தால், அந்த இடத்தில் செடிகள் முளைக்கும். இது விநாயகரின் ஆசீர்வாதம் நமக்கு கிடைப்பதைப் போன்றது. எனவே, இம்முறை அனைவரும் 'விதை விநாயகரை' வைத்து, சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் விநாயகர் சதுர்த்தியை கொண்டாடி மகிழ்வோம்" என்றார். கிரீன் இந்தியா சேலஞ்ச் அமைப்பு இதுவரை இந்தியா முழுவதும் 20 கோடி மரக்கன்றுகளை நட்டு சாதனை படைத்துள்ளது.

நீரை சேமிப்போம்!
மரங்களை வளர்ப்போம்!
பூமிக்கு உயிர் கொடுப்போம்!

# தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத்திற்கு விஷபாட்டிலுடன் வந்த முதியவர் மனு மீது நடவடிக்கை எடுக்கவில்லை என புகார்

தஞ்சாவூர்
செப்டம்பர் 2



தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத் தில் நடந்த குறைதீர்க்கும் கூட்டத் தில் மனு கொடுப்பதற்காக விஷபாட்டிலுடன் முதியவர் வந்தார்தனது மகன்களிடம் இருந்து சொத்துக்களை மீட்டு தரக்கூடிய கொடுத்த மனுக்கள் மீது நடவடிக் கை எடுக்கவில்லை என அவர் புகார் அ ளி த் த ா ர்

தஞ்சாவூர்மாவட்டம் ஒரத்தநாடு தாலுகா மேல உள்ளூர் பகுதி சேர்ந் தவர் கண்ணையன் (வயது 80) ஓய்வு பெற்ற அரசு ஊழியர் இவருடைய மனைவி சாந்தி கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து விட்டார்.இவர்களுக்குஇரண்டு மகன்கள் உள்ளனர். இருவருக்கும் திருமணமாகி தனித்தனியாக வசித்து வருவதுடன் சிங்கப்பூரில் பணியாற்றி வருவதாக கூறப்படுகிறது.இந்த நிலையில் கண்ணன்தஞ்சாவூர்கலெக்டர் அலுவலகத்தி ல் நடைபெறும் பொது மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் மனு அளிப்பதற்காக வந்தார். அவர் மனுவை பதிவு செய்துவிட்டு பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டரங்கில் வந்து மாவட்ட கலெக்டர் ரேவதியிடம் மனு கொடு த்தார் . அப்போதுதான் கொடுத்த மனு மீது உரிய நடவடிக்கை எடுக்க வில்லை, என்றும் இதனால் விஷம் குடிப்பதை தவிர வேறு வழியில் லை என்றும் கூறினார் .அப்போது அவர் தான் பையில் வைத்திருந்த வி ஷ பா ட் டி லை யு ம் எடுத்து மேஜை மீது வைத்தார்

இதையடுத்து அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் கண்ணையனிடம் இருந்து விஷ பாட்டிலை கைப்பற்றி அவரிடம் விசாரணை நடத்தினர் .இதனால் கலெக்டர்அலுவலக சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது

கலெக்டர் யிடம் கண்ணையன் கொடுத்த மனுவில் தனது இரண்டு மகன்களும் தனது சொத்துகளை அபகரித்துக் கொண்டதாகவும் தன்னிடமிருந்த நகை மற்றும் பணத்தையும் எடுத்துச் சென்று வீட்டை விட்டு விரட்டிவிட்டு விட்டனர் . மேலும் தனக்கு உணவு வழங்காமல் மகன்கள் விரட்டிய தால் தற்போது வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். தான் அரசு பணியில் இருந்த போது சம்பாதித் து அனைத்தையும் மகன்கள் அபகரித்துக் கொண்டனர் இது தொடர்பாக ஏற்கனவே தஞ்சாவூர் கோட்டாட்சியரிடம் மனு அளித்தும், இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை, என்றும் தனக்கு வாழ்வதற்கு வழி இல்லாத நிலையில் இருக்கிறேன் எனவே தனது சொத்துக்களை மீண்டு பெற்று தருவதுடன் தனது பிரச்சனைக்கு உரிய தீர்வு காண வேண்டும்எனஅதில்கூறப்பட்டிருந்தது

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பொ து ம க் க ள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடை பெறும் நாட்களில் அலுவலக நுழைவாயிலில் போலீசார் பொது மக்கள் கொண்டு வரும் பைகள் உள்ளிட்ட அவற்றை சோதனை செய்த பின்னரே உள்ளே அனுமதிப் பது வழக்கம். இந்த நிலையில் முதியவர் விஷப்பாட்டிலை எடுத்து வந்தது குறித்து போலீசாரிடம் மாவட்ட கலெக்டர் விசாரித்தார். பொதுமக்கள் கொண்டு வரும் பொருட்களை போலீசார் முறையாக சோதனை செய்தார்களா ? என்று கேள்வி எழுப்பி ன ா ர்

இது போன்ற சம்பவங்கள் இனி மேல் நடைபெறாமல் பாதுகாப்பு பணியில் போலீசார் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மீண்டும் இதுபோல சம்பவம் நடந்தால் சம்பந்தப்பட்ட போலீசார் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலெக்டர் எச்சரிக்கை விடுத்தார்

# குமரியில் பராமரிப்பின்றி புதரின் அடியில் புதைந்த நாகர்கோவில் புளியடி பூங்கா ; சமூக பொதுநல இயக்கம் புகார்



நாகர்கோவில், செப்.2 நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட புளியடி பகுதியில் அம்ருத் திட்டம்2017 20ன்கீழ் சுமார் 1 கோடி செலவில் பூங்கா அமைக்கப்பட்டது. இயற்கை எழில் சூழ்ந்த புத்தேரி குளத்தின் அருகாமையில் மக்கள் பொழுதுபோக்கிற்காகவும், சிறுவர்கள் விளையாடி மகிழும் வகையிலும் நேர்த்தியாக இப்பூங்கா கட்டப்பட்டது. இதனை அப்போது நிதி மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறையின் மத்திய இணை அமைச்சராக இருந்த பொன். ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். இந்நிலையில் மாநகராட்சி சார்பில் குறிப்பிட்ட பூங்காவில் எவ்வித பராமரிப்பு பணிகளும் செய்யப்படாததால் பூங்கா புதர் காட்டிற்குள் புதைந்து போனது. இப்பூங்காவில் சிறுவர்கள் பயன்படுத்தும் விளையாட்டு உபகரணங்கள்அனைத்தும்பயன்பாடின்றி உடைந்து போனது. மேலும் பூங்காவில் உள்ள கட்டுமானம் மற்றும் இரும்பு அலங்கார தடுப்பு கம்பிகளும் நொறிந்து போனது. புதர்காடாக காட்சி அளிப்பதால் விஷ ஜந்துக்களின் புகலிடமாக பூங்கா மாறியதால் இங்கு எவரும் அச்சப் பட்டு வராமல் புறக்கணித்தனர். இதன் விளைவாக இப்பகுதி குப்பைகள் கொட்டும் கிட்டங்கியாக உருமாற்றம் அடைந்தது. இதனால் இங்கு துர்நாற்றம் வீசி வருவதோடு சுகாதாரபாதிப்புகளை உருவாக்கும் இடமாக இப்பூங்கா மாறிப்போனது. பெயரில் மட்டுமே பூங்கா இருக்கிறதே ஒழிய இங்கு புதர் காடே காட்சி அளிக்கிறது. இதனால் பல லட்சம் மக்கள் பணம் விரயமாகி வருவதோடு பூங்கா மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் குடிமகன்களின் கூடாரமாகவும், சமூகவிரோதிகளின் சரணாலயமாகவும் திகழ்கிறது. தனது பொலிவினையும், அழகையும் இழந்து பாழடைந்து இப்பூங்கா காட்சி அளிக்கிறது. மாநகராட்சி பகுதியில் புத்தேரி குளக்கரையில் சிறப்பாக அமைந்த இப்பூங்கா பலருக்கும் ஓய்விடமாக இருந்தது தற்போது இப்பூங்காவே ஓய்வு அடையும் இடமாக கவனிப்பின்றி கைவிடப்பட்டு கவலைக்கிடமாக உள்ளது.

இப்பூங்காவினை சீரமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் இங்குள்ள புதர் முட்காடுகள் அகற்றப்பட வேண்டும். சிதைந்தும், இடிந்தும், உடைந்தும் உள்ள கட்டுமானப் பகுதிகளை சீரமைத்து மீண்டும் பூங்கா காண்போர் கண்களை கொள்ளை கொள்ளும் விதமாகவும், அமைதியைத் தேடி இங்கு வருபவர்கள் அச்சம் கொள்ளாத வகையிலும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். குழந்தைகள் மற்றும் மாணவர்கள் பயன்படுத்தும் விதமாக இங்கு பழுதடைந்த நிலையில் உள்ள அறிவியல் பூங்காவினை புனரமைக்க வேண்டும். புளியடி பூங்காவினை மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதோடு தொடர்ந்து பராமரித்து பாதுகாத்திட உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என சமூக பொதுநல இயக்கம் பொதுசெயலாளர் சங்கர பாண்டியன் தலைமையில் நிர்வாகிகள் குமரி மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

# 'கொடுங்கோல் ஆட்சியை பார்க்கிறோம்' பாஜக மீது புதுச்சேரி காங்கிரஸ் விமர்சனம்

புதுச்சேரி: நாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் பேசுபவர்களைஒடுக்கும் வகையில் பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் அமைப்புகள் கொடுங்கோல் ஆட்சி நடத்தி வருவதாக புதுச்சேரி மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி விமர்சித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலத்தில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மீது பதிவு செய்யப்பட்ட எப்ஐஆர்ஐ கண்டித்தும், பாஜக நிர்வாகிகள், ஆர்எஸ்எஸ் அமைப்பைச் சேர்ந்தவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுத்து எப்ஐஆர் பதிவு செய்ய வலியுறுத்தியும் புதுச்சேரிகாங்கிரஸ்கட்சிசார்பில்கண்டன ஆர்ப்பாட்டம் இன்று நடைபெற்றது.

அண்ணா சிலை அருகே நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு மாநில தலைவர் வைத்திலிங்கம் எம்பி தலைமை தாங்கினார். முன்னாள் முதல்வர் நாராயணசாமி, முன்னாள் அமைச்சர்கள் கந்தகசாமி, ஷாஜகான், இளைஞர் காங்கிரஸ் மாநில தலைவர் ஆனந்தபாபு, மகளிர் காங்கிரஸ் நிஷா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு மற்றும் ஆர்எஸ்எஸ்அமைப்புக்குஎதிராககண்டன கோஷங்களை எழுப்பினர்.

இதில் வைத்திலிங்கம் எம்.பி பேசியது: "ஒடுக்கப்பட்டவர்களின் உரிமையை பேசுவதற்கு கூட அனுமதிக்காத பாஜக அரசு, ஆர்எஸ்எஸ் அரசு, புதுச்சேரியில் இருக்கும் அமைச்சர் நமச்சிவாயம் அரசு, இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது மிகக் கொடுமையான நிகழ்வு. நாட்டில் இருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமையை யார் பேசினாலும் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லக்கூடிய நிலைப்பாட்டை பாஜக எடுத்திருக்கின்றது. புதுச்சேரியில் தனியார் நிறுவனத்தில் நடந்த குற்றச்சாட்டை விசாரிக்க ஒரு எம்எல்ஏ செல்கிறார். அவர் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்.

அவர் மீது உடனடியாக வழக்கை பதிவு செய்கின்றனர். ஆனால் இவர்கள் யார் சென்றாலும் எந்தவித வழக்கும் கிடையாது. ஹெல்மெட் இல்லாமல் எம்எல்ஏ ஒருவர் வருகின்றார். அவர் மீது வழக்குப் பதிவு செய்கின்றனர். ஆனால் முதல்வரும் ஹெல்மெட் இல்லாமல்தான் போகிறார் அவர் மீது வழக்கு இல்லை.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.